Australian Government

COVID-19 VACCINATION

# ‘கோவிட்-19’ தடுப்பூசி மருந்து விநியோகத்தைப் பற்றிய புதுப்பிக்கப்பட்ட அறிவுரைகள்

17 ஜூன் 2021

60 வயதிற்குக் கீழ்ப்பட்ட வயதுவந்தவர்களுக்கு ‘ஃபைஸர் கோவிட்-19’ தடுப்பூசி மருந்தினை ஆஸ்திரேலியாவில் உள்ள மருத்துவ வல்லுநர்கள் இப்போது பரிந்துரைக்கின்றனர். 50 வயதிற்குக் கீழ்ப்பட்ட வயதுவந்தவர்களுக்கு ‘ஃபைஸர்’ தடுப்பூசி மருந்து தெரிவுசெய்யப்படும் என்பது முந்தைய மருத்துவ அறிவுரையாக இருந்தது.

50-59 வயதுடையவர்களில் முதலில் கருதப்பட்டதை விட அதிகமானவர்களுக்கு அரிதான இரத்த உறைவு ஒன்று ஏற்படும் நிலைக்கான அபாயம் அதிகம் இருப்பதாகக் காண்பிக்கும் புதிய ஆதாரங்களின் அடிப்படையில் இந்தப் புதுப்பிக்கப்பட்ட அறிவுரை அமைகிறது. ‘குறைந்த இரத்த-வட்டு அளவுகளோடு கூடிய இரத்த உறைவு நோயறிகுறி’ (த்ரோம்போசிஸ் வித் த்ரோம்போஸைட்டபீனியா சின்ட்ரம்’ (thrombosis with thrombocytopenia syndrome) அல்லது ‘டீ.டீ.எஸ்’ (TTS) என்று இந்த நோய்-நிலை சொல்லப்படுகிறது.

60 மற்றும் அதற்கு மேற்பட்ட வயதுடையவர்களுக்கு ‘ஆஸ்ட்ரா-ஸெனெகா’ தடுப்பூசி மருந்து கொடுக்கப்படும். 60 மற்றும் அதற்கு மேற்பட்ட வயதுடையவர்களுக்கு தடுப்பூசி மருந்தினை இட்டுக்கொள்வதினால் கிடைக்கும் பலன்கள் அவர்களுக்கு ‘டீ.டீ.எஸ்’ (TTS) ஏற்படுவதற்கான ஆபத்தினை விட அதிகமாகும்.

‘கோவிட்-19’ காரணமாக தீவிர நோய்வாய்ப்படுவதையும், மரணமடைவதையும் தடுப்பதற்கான அதி முக்கிய வழியாக தடுப்பூசி மருந்தினை இட்டுக்கொள்வது இருக்கிறது. உலகெங்கிலுமுள்ள பல இலட்சக் கணக்கான மக்கள் பாதுகாப்பான முறையில் தடுப்பூசி மருந்துகளை இட்டுக்கொண்டுள்ளனர்.

பாரதூரமான கேடு மிக்க பக்க விளைவுகள் எதுவும் இல்லாமல், தமது ‘ஆஸ்ட்ரா-ஸெனெகா’ தடுப்பூசி மருந்தின் முதல் அளவினை இட்டுக்கொண்டிருப்பவர்கள் அவர்களுக்கான இரண்டாவது மருந்தளவை இப்போதும் இட்டுக்கொள்ள வேண்டும். 60 வயதிற்குக் கீழ்ப்பட்ட வயதுடைய வயதுவந்தவர்களை இது உள்ளடக்கும்.

உங்களுடைய இரண்டாவது தடுப்பூசி மருந்தினை இடுக்கொள்வதானது 'கோவிட்-19'-இல் இருந்து பாரதூரமான வகையில் நோய்வாய்ப்படுவதைத் தடுப்பதற்கு ஆகச் சிறந்த பாதுகாப்பினை உங்களுக்கு அளிக்கிறது. உங்களுடைய முதலாவது மருந்தளவினை நீங்கள் இட்டுக்கொண்டிருந்தீர்களேயானால், உங்களுடைய இரண்டாவது மருந்தளவைப் பெறுவதற்கான முன்பதிவினை நீங்கள் செய்துகொள்ள வேண்டும்.

'ப்ஃபைஸர் கோவிட்-19' தடுப்பூசி மருந்தினை ஏற்கனவே அளித்துக்கொண்டிருக்கும் அரசாங்க தடுப்பு மருந்தளிப்பு சிகிச்சையகங்கள் 'ப்ஃபைஸர்'-இற்காக 50-59 வயதிற்கு இடைப்பட்டவர்களை ஏற்றுக்கொள்வதை உடனடியாகத் துவங்கும்.

இங்கிருந்தும், வெளிநாடுகளிலிருந்தும் கிடைக்கும் ஆதாரங்களையும், தரவுகளையும் நமது மருத்துவ வல்லுநர்கள் தொடர்ந்து மீள்பார்வையிட்டு வருவார்கள் என்பதில் ஆஸ்திரேலிய மக்கள் நம்பிக்கையுடன் இருக்கலாம். தகுதி பெறும் ஒவ்வொருவரும் 'கோவிட்-19' தடுப்பூசி மருந்தினை இட்டுக்கொள்ளுமாறு சிபாரிசு செய்யப்படுகிறது.

உங்களுக்கான தடுப்பூசி மருந்தினைப் பெற்றுக்கொள்வதற்கான சந்திப்புவேளைக்கு முன்பதிவினைச் செய்ய **health.gov.au** எனும் வலைத்தலத்திற்குச் செல்லுங்கள்.

## மேலதிகத் தகவல்களுக்கு

'கோவிட்-19' தடுப்பூசி மருந்துகளைப் பற்றிய கேள்விகள் உங்களுக்கு இருந்தால், உங்களுடைய மருத்துவருடன் பேசுங்கள், **www.health.gov.au/covid19-vaccines-languages** எனும் வலைத்தலப் பக்கத்திற்குச் செல்லுங்கள், அல்லது **1800 020 080** எனும் இலக்கத்தில் 'தேசிய கொரோனாவைரஸ் உதவி இணைப்பினை அழையுங்கள். மொழிபெயர்ப்பு மற்றும் மொழிபெயர்த்துரைப்பு சேவைகளுக்கு **131 450** எனும் இலக்கத்தினை அழையுங்கள்.